Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month — Date of Posting 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 — Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd. 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

ஸ்ரீ ஹரி

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளீ

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 19 | நவம்பர் 2013 | கானம் : 4

Delivered by India Post — www.indiapost.gov.in

Please Subscribe to Madhuramurali - details on top of last page













Please Subscribe to Madhuramurali - details on top of last page




பெங்களூரு- ஜே.பி.நகரில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹ பிரவசனம்
- அக்டோபர் 16-22, 2013



Please Subscribe to Madhuramurali - details on top of last page




செப்டம்பர் 29 - கலிபோர்னியாவில் - G.O.D USA சார்பாக
"அந்தர்யாமி" - கலைநிகழ்ச்சி - ராமானுஜம் ஜி முன்னிலையில்



செப் 30 - அக் 6 - சனாதன் தர்ம கேந்திரா சார்பாக - ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்
- ராமானுஜம்ஜி - Sunnyvale, USA



அக்டோபர் 5, 2013 - முரளிஜி முன்னிலையில் - அமைந்தகரையில் நகரசங்கீர்த்தனம்
ஸ்ரீப்ரசன்ன வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை





அக்டோபர் 28 பாக்யநாதன்ஜி முன்னிலையில் -
ஆஸ்திரேலிய நாமத்வார் பூமி பூஜை - GOD Aus அன்பர்கள்



ஆஸ்திரேலியா - ஆஸ்டிரல் ஸ்ரீராம்க்ருஷ்ண மந்திரில் ஸ்ரீப்ரேமிக வரதன் பிரதிஷ்டை
மற்றும் ஸ்ரீஸ்வாமிஜி திருவுருவம் திறப்பு - பாக்யநாதன்ஜி - அக்டோபர் 18, 19 - 2013



Please Subscribe to Madhuramurali - details on top of last page

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 நவம்பர் 2013 கானம்: 4

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 212 | 03 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 10 |
| பாகவத பழம்- ஸ்க2 - ப6 | 12 |
| மஹாமந்திர நாம சப்தாஹம் | 16 |
| ஸ்ரீகிருஷ்ண கவசம் | 18 |
| அத்வைத தத்வம் | 26 |
| ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 28 |
| ஸ்ரீப்ரேமிகவரதன் கோவில் | 30 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| மாலே மணிவண்ணா | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

அநுபூதி மஹான்களுடன், திருவருள் பெற்றோருடன் சேர்வதால், அத்தகையவர்களை அணுகுவதால், ஒருவனுடைய பாவங்கள் நீங்குகின்றன. அது, அவனை உண்மை பேச செய்கிறது. கௌரவம் உயர்கிறது. அவனுடைய மனம் தூய்மை அடைகிறது. அவனுடைய புகழ் ஓங்குகிறது. மஹான்களின் பாத தூளி அவனுடைய தீமைகளை ஒழிக்கிறது. அவனுக்கு எல்லா செல்வங்களையும் கொடுக்கிறது. சம்ஸாரம் எனும் கடலை தாண்ட செய்கிறது. அது யாவரையும் புனிதமாக்குகிறது. மானிடருக்கு மஹான்களின் சங்கம் எதைத்தான் செய்யாது!

- கவி ரவீந்திரர்

Please Subscribe to Madhuramurali - details on top of last page

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : ஆனந்த பைரவி திஸ்ர நடை

கம்பீர ஸ்ரீநிவாஸ திவ்ய பீதாம்பர சாருவேஷ
விசேஷ கடாக்ஷப்ரபாவ திவ்ய சேஷகிரி நிவாஸ


மஹாரண்ய மஹானுபாவ மன்மத ஜனக மாரமண
வினதாஸுத வாஹன வினீதஜனரக்ஷக

சங்கசக்ரதரண பங்கஜ லோசன மங்களசரண
ரிக் வேதாதி மந்த்ரஸ்வரூப ப்ருகுமுனி ஸேவித சரண

சாளக்ராம மாலாதர கால க்ரமோத்ஸவ வைபவ
நீலோத்பலதளநயன ஸ்ரீதேவி பூதேவி ஸஹித

குடிலாளகபர குந்தள கலியுக ப்ரத்யக்ஷ தேவ
ஸந்ததம் ஸேவித முரளீதர ஸாது ஸஜ்ஜன
ஹ்ருதய வாஸ

முன் அட்டை: கேரளா கஞ்சன்கோடு ஸ்வாமி ராம்தாஸின் ஆனந்தாஸ்ரமத்தில்
பின் அட்டை: சிட்னி - ஆஸ்டிரல், ஆஸ்திரேலியா, ஸ்ரீராம் கிருஷ்ண கோவிலில் ஸ்ரீப்ரேமிகவரதன் ஸ்தாபிதம்





Please Subscribe to Madhuramurali - details on top of last page

# மதுரமான மஹனீயர் - 212

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொல்கையில் "வாழ்க்கையில் தொடர்ந்து துக்கத்தை மட்டுமே அல்லது இன்பத்தை மட்டுமே அனுபவித்தவர்கள் என்று இல்லை. வாழ்க்கையில் அனைவருக்கும் இன்ப, துன்பங்கள் மாறி மாறி ஏற்படுவது சகஜம்" என்பார்கள். அசோகவனத்தில் இருக்கையில், சீதாபிராட்டி கூட தொடர்ந்து துக்கப்படுவதென்பது அசாத்தியமென்கிறாள் அல்லவா? இப்படிப்பட்ட வாழ்க்கையின் பிடி கொஞ்சம் தளர்ந்து மனசாந்தி வேண்டுமானால், அதை உவமை சொல்ல முடியாத நிகரற்ற மனசாந்தி குடி கொண்டிருக்கும் மஹான்களின் நிழல் மட்டுமே தரவல்லது. திருவள்ளுவரும் இதை "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்று அழுத்தந்திருத்தமாக சொல்கிறார். வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளில் தத்தளிக்கும் ஒரு ஜீவன், சத்குருவின் தரிசனம் பெற்றவுடன் தனக்கு விடிவு பிறந்து விட்டதை உளமாற உணர்ந்து கொள்கிறான். அப்படி ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சன்னதி சேர்ந்த பல அன்பர்களில் கண்ணம்மா ஒருவர்.

ஈஸ்வர சங்கல்பத்தினால், ஒரு ஜீவனை சத்குரு எடுத்து கொள்ள தீர்மானித்த உடனேயே, அது சத்குருவின் பார்வைக்குள் வந்து விடுகிறது. கண்ணம்மா தனது அக்கா லஷ்மியுடன் ராயப்பேட்டையில் வசித்து வந்தார். லஷ்மி அவர்கள், ராயப்பேட்டை மாருதி பிரிண்டர்ஸுக்கு ஒரு வேலை நிமித்தமாக சென்றிருக்கிறார். அங்கு இருந்த மதுரமுரளி இதழையும், இதழில் கண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவமும், கட்டுரைகளும் அவருக்கு மிகவும் பிடித்து இருந்ததால், அவர் மதுரமுரளி சந்தாதாரரும் ஆனார். அதுமுதல், ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஆவல் இருந்தாலும், சரியான சந்தர்ப்பம் அமையவில்லை. அது 2001ஆம் ஆண்டு. அவ்வருட கோகுலாஷ்டமி உற்சவ விவரம், மதுரமுரளியில் வெளியாகி இருந்தது. அதற்கு செல்ல வேண்டும் என சகோதரிகளிருவரும் மிக ஆசைப்பட்டனர்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

இருப்பினும் போக முடியாமல் போயிற்று. அவ்வருடம் மதுரமுரளி சந்தாதாரர் அனைவருக்குமே, கோகுலாஷ்டமி உற்சவ பிரசாதம் அனுப்பப்பட்டு இருந்தது. மதுரமுரளி இதழ் பெறுவோர் அனைவருமே, குருநாதரின் கருணாகடாக்ஷத்திற்கு பாத்திரர்கள் என்பதற்கு வேறு ஒரு நிரூபணம் தேவையுமில்லை.

கோகுலாஷ்டமி பிரசாதம் கிடைத்தவுடன், குருநாதரை தரிசிக்க வேண்டும் எனும் ஆசை மேலும் அதிகரித்தது. செப்டம்பர் 1-இல் ப்ரேமிக பவனத்தில் குருநாதரை, சகோதரிகள், முதல் முறையாக தரிசித்து வணங்கினர். அப்பொழுது ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாளின் சன்னதியில் குருநாதர் இருந்தார்கள். சகோதரிகள் பேசும் முன்னரே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, சன்னதியில் இருந்தபடியே, "ராயப்பேட்டையில் இருந்து வருகிறாயா" என்று கேட்க, இருவரும் ஆச்சரியமடைந்தனர்.

அன்றைய தினமே, குருநாதர் கண்ணம்மா சகோதரிகளிடம் பேசி, விவரமறிந்தார்கள். அது அவர்களுக்கு மிகுந்த மனசாந்தியை தந்தது. குருவின் அருள் எனும் அம்பு பட்ட ஒருவர் மனம், குருவிடம் தஞ்சமடைவதில் என்ன வியப்பு? அன்றே, குருநாதர் நாம உபதேசமும் செய்தருளினார்கள்.

பல குழந்தைகள் தனக்கு இருந்தாலும், தன்னை விட்டு வெகு தூரத்திலிருக்கும் குழந்தை குறித்தே, அன்னை அதிகம் கவலைப்படுவாள் என்று குருநாதர் சொல்வார்கள். அது குருநாதருக்குமே மிக பொருந்தும். அவரை தரிசிக்க ஒரு குடும்பத்தில் உள்ள பலரும் வந்திருப்பினும், யாராவது வர இயலவில்லை எனில், அந்த அன்பரை பற்றியே, குருநாதர் விசாரிப்பதை நான் பன்முறை கண்டிருக்கிறேன்.

லஷ்மி குருநாதரை பிரதி ஏகாதசி தரிசனம் செய்து வந்தார். கால் வலி காரணமாக, சிலமுறை மட்டுமே, கண்ணம்மா வந்து கொண்டிருந்தார். அப்பொழுது எல்லாம், தவறாமல், குருநாதர் "தங்கை வரவில்லையா" என்று விசாரிப்பார்கள். கண்ணம்மா ஒருமுறை லஷ்மியிடம் இது பற்றி "அதென்ன என் பெயர் அவருக்கு தெரியாதா? ஏன் தங்கை எப்படி இருக்கிறாள் என்று மட்டும் விசாரிக்கிறார்" என்று கேட்டு இருக்கிறார். மறு ஏகாதசியே குருநாதர், "கண்ணம்மா எப்படி இருக்கிறாள்" என்று கேட்க இருவருக்கும் ஆச்சரியம் மிகுந்தது. குருநாதர் ஒரு விஷயத்தில் மனம் செலுத்தினால், அதற்கு ஒரு தீர்வு வருமல்லவா? நெடு



Please Subscribe to Madhuramurali - details on top of last page

நாட்களாக இருந்த கண்ணம்மாவின் கால் வலி குருநாதரருளால் மெல்ல சரியானது. பின்னர், குருநாதர் அனுமதியுடன் உத்யோகத்தையும் விட்டு விட்டு, சத்சங்கத்தில் முழுவதுமாக கண்ணம்மா ஈடுபடலானார்.

2006இல் துவங்கி, ப்ரேமிக பவனத்தில் 108முறை பாகவத சப்தாஹம் மிக விமரிசையாக, தொடர்ச்சியாக நடைபெற்றது. இப்படி தடையின்றி நடப்பது மிகப்பெரிய விஷயமென்றும், பகவானின் திருவருளே இதை நடத்தி வைத்தது என்றும் குருநாதர் பகர்வார்கள். இப்படி இடையறாமல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ப்ரேமிக பவனத்தில் சத்சங்கங்களை நடத்தி வந்திருப்பதால், ப்ரேமிக பவனத்தின் சான்னித்யம் ஒரு திவ்ய க்ஷேத்ரம் போன்று இருக்கும். கண்ணம்மாவை நாமஜபத்தை செவ்வனே ஜபித்து வர உத்திரவு தந்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், முதலில் பாகவதம் படிக்க உத்திரவு தரவில்லை. பின்னர், மேற் கண்ட ப்ரேமிகபவன பாகவத சப்தாஹங்கள் ஒன்று கூட விடாமல், கலந்து கொள்ள வேண்டும் என்று குருநாதர் ஆக்ஞை பிறப்பித்தார்கள். பாகவதம் படி என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் "நன்றாக படிக்க வேண்டும் என்று பகவானிடம் வேண்டிக்கொள்" என்றும் உபதேசித்தார்கள். குருநாதரிடம் ப்ரார்த்தனை செய்துவிட்டு பாகவதம் படிக்கையில், பகவானின் அருட்சக்தியால், பாகவத பாராயணம், இலகுவாகவும் இனிமையாகவும் அமைந்துவிட்டதை லஷ்மி நன்கு உணர்ந்தார்.

பகவான் யோசித்து செயலாற்றுவது இல்லை. முக்காலமும் அறிந்த பகவானும் மஹான்களும் யாரை, எதை, எப்படி செய்ய வைக்க வேண்டுமோ, அதை அப்படி செய்ய வைப்பர். காலை வேளையில், தாங்கள் தங்கி இருந்த ராயப்பேட்டையில் இருந்து பாகவதம் படிக்க கண்ணம்மா, அக்காவுடன் வருவார். அச்சமயம் குருநாதர் பாகவதம் பாராயணம் செய்வார்கள். பாகவதம் அறியாதவர்களும், அமைதியாக அமர்ந்து சிரவணம் செய்து மன நிறைவுடன் செல்வர். ப்ரேமிகபவனத்தின் அருகில் வீடு இருந்தால் சுலபமாக இருக்குமே என்பதால், குருநாதர் அனுமதியுடன், அருகில் பிள்ளையார் கோவில் தெருவிலேயே ஒரு வீட்டில் குடிபுகுந்தனர். புதுவீட்டில் ராயப்பேட்டை வீடு போல அலமாரி போன்ற சௌகரியங்களில்லை. அதனால், கண்ணம்மா சலிப்பாக "லஷ்மி, நீ வேண்டுமானால் இங்கே இரு. நான் ராயப்பேட்டைக்கே


Please Subscribe to Madhuramurali - details on top of last page

போகிறேன்" என்றிருக்கிறார். இது நடந்து சில தினங்களில் ஏதோ பேச்சினூடே குருநாதர் கண்ணம்மாவிடம், "உனக்குத்தான் பொழுது போகவில்லையே! வேண்டுமானால் ராயப்பேட்டை செல்கிறாயா" என்றார்கள். "சத்சங்கத்தை விட்டு எங்கே செல்வது" என்று கேட்கையில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பதில் ஒன்றும் பகரவில்லை. வீடு திரும்பிய கண்ணம்மா, "நாம் பேசியதையே அல்லவா, குருநாதர் எதிரொலித்தார்கள். நாம் பேசுவதை எல்லாம் அவர் அறிந்திருக்கிறார்" என்று புரிந்து, ஆச்சரியப்பட்டார். மீண்டும் குருநாதர் அனுமதி பெற்று, ராயப்பேட்டை வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு, ப்ரேமிக பவனம் அருகிலேயே, ஒரு நல்ல வீட்டை வாங்கினர். சுபகாரியம் என்றாலே, குருநாதர், நாமகீர்த்தனம் செய்ய சொல்வார்கள். கண்ணம்மா வீட்டு கிரஹப்ரவேசமன்று, குருநாதர் உத்திரவுப்படி, மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது.

பாரத தேசத்தில், பல பக்தர்களும் ஞானிகளும் தோன்றி பகவானை அனுபவித்த க்ஷேத்ரங்களுக்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அன்பர்களை யாத்திரை சென்று வர சொல்வது வழக்கம். இப்பொழுதும் கூட அன்பர்கள் பஞ்சத்வாரகா யாத்திரை சென்றிருந்தனர். அதுபோலவே, சகோதரிகள் இருவரையும் அவ்வப்பொழுது தலயாத்திரை சென்று வர, ஸ்ரீஸ்வாமிஜி பணிப்பதுண்டு. ஒருமுறை, ஆந்திராவை சேர்ந்த ஓங்கோல் நாமத்வாரில், மூன்று மாதங்கள் இருவரையும் தங்க சொன்னார்கள். சத்குருவானவர் கண்ணுக்கு தெரியாமல், வாழ்க்கையை மாற்றி அமைக்கிறார். இது புரியக்கூடிய விஷயமன்று. நடக்கும் சம்பவங்களை கொண்டுதான், ஓரளவு மனதால் புரிந்து கொள்ள முடியும். வாழ்க்கையின் அந்தந்த கட்டத்தில், ஜீவனுக்கு தேவையான பக்குவத்தையும், குருநாதர் தந்து விடுவதையும் பார்க்க முடியும்.

மூன்று மாதங்கள் கழித்து, ஓங்கோல் வந்த குருநாதர் "இங்கேயே இருந்து விடுகிறாயா?" என்று வினவ, கண்ணம்மா "இல்லை; நான் சென்னைக்கே வந்து விடுகிறேன்" என்று சொல்லி இருக்கிறார். அப்பொழுது குருநாதர், "உனக்கு ஒரு ஆபத்து வர இருந்தது. உன் பாதுகாப்பிற்காகத்தான் உன்னை இங்கே இருக்க சொன்னேன்" என்றார்கள். அதைக்கேட்டு கண்ணம்மாவிற்கு தூக்கி வாரிப்போட்டது. குருநாதர், நம்மை, எப்படி எல்லாம்



Please Subscribe to Madhuramurali - details on top of last page

காப்பாற்றுகிறார்கள் என்பது புரிந்தது. "நான் ஓங்கோலிலேயே இருந்து விடுகிறேன்" என்றார். குருநாதரோ, "வேண்டாம் பரவாயில்லை. சென்னை வந்து விடு. பார்த்து கொள்கிறேன்" என்று அனுமதி தந்தார்கள். நமக்கு துக்கம் வந்தால், ஒரு அன்னையால் என்ன செய்ய முடியும்? உடன் இருந்து கவலைப்பட முடியும். ஆறுதல் வார்த்தைகள் தர முடியும். ஒத்தாசையாக இருக்க முடியும். ஆனால் அவளால் கஷ்டத்தை தீர்க்க முடியாதே? குருநாதரோ, பகவானோ அப்படி அல்லவே! தம்மிடம் அண்டிய ஜீவன்களுக்காக கவலையும் படுவர். நேர இருக்கும் கஷ்டத்திலிருந்து காத்தும் விடுவர்!

லஷ்மிக்கு வெய்யில் தாங்காது. பாகவதத்தை, பரீக்ஷித் மஹாராஜாவிற்கு சுகமுனிவர் உபதேசித்தது, சுக்தால் எனும் இடம். பாரதத்தின் க்ஷேத்ரங்களில் எல்லாம், சத்சங்கங்களை நிகழ்த்த குருநாதருக்கு ஆசை அலாதியாக இருக்கும். அப்படித்தான் திரளான அன்பர்களை சுக்தாலுக்கும் சென்று, பாகவத சப்தாஹம் நடத்த சொன்னார்கள். அச்சமயத்தில் சுக்தாலில் அடித்த வெய்யில் தாங்காமல், லஷ்மிக்கு மயக்கம் வந்து விட்டது. பிழைப்பாரா என்று சொல்லும் அளவிற்கு, உடல்நிலை மோசமானது. சப்தாஹம் முடிந்து எல்லோரும் ரெயிலில் திரும்ப இருக்கையில், லஷ்மியோ ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருந்தார். குருநாதர் உத்திரவுப்படி சத்சங்கத்தினரே கூட இருந்து, கவனித்து கொண்டனர். உடல் நலம் தேறிய பின், லஷ்மி ஓரிரு நாள் கழித்து, விமானத்தில் சௌகரியமாய் சென்னை வந்து சேர்ந்தார். சத்சங்கத்தில் லஷ்மியை அப்போது பார்த்த எல்லோரும், ஒருமனதாய் "லஷ்மி பிழைத்தது ஆச்சரியம். எல்லாம் குருவருள்" என்றனர் என்றால், பார்த்து கொள்ளுங்கள்!

குருநாதருக்கு எப்பொழுதுமே **Simple Obedience** - அவர் சொல்வதை, அப்படியே செய்வது என்பது மிகவும் பிடித்த ஒரு விஷயம். அவர் சொல்வதில் எல்லாம், எப்பொழுதும் ஒரு ஆழ்ந்த காரணம் நிரம்பி இருக்கும். நமது புத்தியை கொண்டு ஆராய்ந்தால், அது புரியவே புரியாது. கண்ணம்மாவின் தந்தை, கோவையில் வியாபாரமும் நிலபுலன்களும் கொண்டு, குடும்பம் நடத்தினார். தனது கடமைகளை முடித்த பிறகு, மகனுடன் மும்பை சென்று தங்கி இருந்தார். அம்மா 1998இல் காலமாகி இருந்தார். 2001இல் சகோதரிகளுக்கு, குருநாதரின் தரிசனம் ஆகி


Please Subscribe to Madhuramurali - details on top of last page

இருந்தது. 2004 பிப்ரவரியில் ஆஸ்ரமத்தில், ஒருமுறை குருநாதர் கூப்பிட்டு "இருவரும் மும்பை சென்று அப்பாவை பார்த்து, 15நாள் இருந்து விட்டு வாருங்கள்" என்றார்கள். "இந்த பிப்ரவரியில் வேண்டாம், மே மாதம் செல்கிறோம்" என்று இவர்கள் சொல்ல சொல்லவே, குருநாதர் கண்டிப்புடன், "அதுவரை அவர் காத்து இருக்க வேண்டுமே" என்று அழுத்தமாக பேசினார்கள். குருநாதர் இப்படி பேசுகிறார் என்றால் காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணி, இருவரும் தந்தையை பார்க்க மும்பை கிளம்பி சென்றனர். கிளம்பும் முன் குருநாதர் பேரிச்சம்பழத்தை கொடுத்து "இதை தந்தைக்கு கொடுத்து வா" என்று சொல்லி இருந்தார்கள். அதை தினமும் தந்தைக்கு கொடுத்து வந்தனர். அது தீரும் சமயம், சரியாக அவரது தந்தை "நாக்கில் ருசியே போய் விட்டது" என்றார். ஏப்ரல் மாதமே, அப்பா இறைவனடி சேர்ந்தார். குருநாதர் சொன்னது போல், மே மாதம் அவர் இல்லவே இல்லை!

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தினமுமே, ப்ரேமிகவரதனுக்கு நித்ய ஆராதனை, உற்சவங்கள் என்று இருப்பார்கள். தவிரவும் அவர் ஸ்தாபித்த பல ஸ்தாபனங்கள், வேத பாடசாலைகளுக்காகவும் மற்றும் சத்சங்கங்கள், கூட்டு பிரார்த்தனைகள், கோவில் கும்பாபிஷேகங்கள் என்று எல்லாவற்றிற்காகவும் ஊர் ஊராக செல்ல வேண்டி இருக்கும். செல்லும் இடங்களில் எல்லாம், ஏராளமான அன்பர்கள் அவர் தரிசனத்திற்கு வருவார்கள். இதற்கு நடுவிலும், அன்பர் உடல்நலம் விசாரிக்க நேரிலும் செல்வார்கள். அன்பர்கள் வீட்டில் வேத பாராயணம், கிரஹப்ரவேசம், சத்சங்கம் என்றால், ஸ்ரீஸ்வாமிஜி வந்து அருள வேண்டும் என அழைப்பார்கள். அதற்கும் செல்ல வேண்டி இருக்கும்.

ராயப்பேட்டை வீட்டில் இருக்கையில், கண்ணம்மா ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை, வீட்டிற்கு வந்து சத்சங்கத்தில் கலந்து கொண்டு, அருள வேண்டும் என பன்முறை அழைத்தவாறு இருந்தார். குருநாதரும் வருகிறேன் என்று சொல்வார்கள். ஆனாலும் போக முடியாமலே, ஏதாவது ஒரு அலுவல் வந்து விடும். ஒரு கட்டத்தில் வருத்தமும் கோபமுமாக இருந்தது கண்ணம்மாவிற்கு! குருநாதருக்கு இது தெரியாதா என்ன? ஒருமுறை குருநாதரை தரிசிக்க வந்த கண்ணம்மா, மனதில், வீட்டிற்கு குருநாதர் வருவதே இல்லையே என்று எண்ணியவாறு, மிக்க வருத்தமுடன் வீட்டிற்கு சென்றார். சிறிது நேரம் கழித்து



Please Subscribe to Madhuramurali - details on top of last page

தொலைபேசியில், ஹரிஜி வீட்டு முகவரியை விசாரித்தார். எதற்கு விசாரிக்கிறாரென யோசிப்பதற்குள், வாசலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, தரிசனம் தர, வீட்டிற்கே வந்து விட்டார்கள். சிறிது நேரம் கழித்து கிளம்புகையில், ஒரு கிருஷ்ண விக்ரஹத்தையும் அளித்து சென்றார்கள்.

பாகவதம் படிப்பது சிரமம்; வராது என்று நினைத்த தன்னை கொஞ்சம் கொஞ்சமாக, நன்கு பாகவதம் படிக்கும் அளவிற்கு குருநாதர் மாற்றி விட்டார்கள் என்கிறார் கண்ணம்மா. இதன் பிறகு ஒரு கனவு அவருக்கு வந்தது. கனவில் கொள்ளை அழகுடன் கிருஷ்ணன் தோன்றி, அப்படியே அர்ச்சாவதாரமாகி விடுகிறான். அந்த கிருஷ்ணனை ஓடி வந்து ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் தந்து அவரிடம், "பக்தியே இல்லாத எனக்கு எப்படி கிருஷ்ணன் கிடைத்தான்" என்று கேட்கிறார் கண்ணம்மா. குருநாதர், மந்தஹாசத்துடன் இருந்து விடுகிறார். அத்துடன் கனவு கலைகிறது. கனவை அப்படியே குருநாதரிடம் சென்று சொன்னார் கண்ணம்மா. குருநாதர் அப்பொழுது " நீ பாகவதம் எழுது" என்று ஆக்ஞாபித்தார்கள். பாகவதம் பிரத்யக்ஷ கிருஷ்ணன் என்று சொல்வார் அல்லவா குருநாதர்! பாகவதம் எழுதவும், படிக்கவும் செய்வது என்பது, குழந்தை கிருஷ்ணனுடன் இருந்து அனுபவிப்பது போல்தானே?

குருநாதரின் பாதாரவிந்த நிழலில், என்றென்றும் தங்களுக்கு இடம் வேண்டுமென்பதே, கண்ணம்மா சகோதரிகளின் பிரார்த்தனையாக இருக்கிறது.


GOD **GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA TRUST**

## "The Blessed Will Pray"

**2014 ஆங்கில புத்தாண்டு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை**

**ஜனவரி 1, புதன்கிழமை** **TIME – 6 – 8.30PM**

**இடம்: ஸ்ரீரேணுகா வித்யாலயம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பெரியகுளம் - தேனி மெயின் ரோடு, லக்ஷ்மிபுரம் - 625523**





Please Subscribe to Madhuramurali - details on top of last page



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: தனிமையில் விரதங்களை அனுஷ்டித்தவாறு, ஓரிடத்தில் அமர்ந்து கண்களை மூடி - இப்படி நியமங்களுடன்தான், தியானம் செய்ய வேண்டும் என்கின்றார்களே?

பதில்: ஒரு அறையில், மெல்லிய குழலோசை கேட்பதாக வைத்து கொள்வோம். அதே சமயம், அறைக்கு வெளியே பலத்த சப்தம் கேட்டு கொண்டு இருந்தது எனில், குழலோசை தெளிவாக காதில் விழாது. அறைக்கதவை சாத்தி விட்டாலோ, வெளியிலேற்படும் சப்தம் கேட்பது தடைபடுவதால், அறைக்குள் எழும் குழலோசை மிக தெளிவாக கேட்கும்.

அதுபோல, எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆத்மஸ்புரணத்தை ஒருவர் உணர வேண்டுமெனில் கண், காது போன்ற புலன்களின் வாயிலாக மனம் செல்வதை தடுக்க வேண்டும். புலனானுபவம் உணரப்படாத பொழுதுதான், ஆத்ம ஸ்புரணத்தை சரியாக உணர முடியும்.

இனிப்பு பதார்த்தத்தை சாப்பிட்டு விட்டு, காபி போன்ற பானங்களை சாப்பிடுவோருக்கு, அந்த பானங்கள் கசக்கும். புலனானுபவம் என்னும் சுவை இருக்கையில், மனது எப்படி இயங்குகிறது என்பதையோ, ஆத்மஸ்புரணத்தையோ தெளிவாக உணரவே முடியாது.

கண் வழியாக மனது வெளியில் செல்வதை தடுக்க கண்களை மூடியும், காதுகளில் பிற சப்தம் விழாமலிருக்க தனிமையும், நாக்கை அடக்க உபவாசத்தையும், ப்ராணனை சீராக்க ஆசனத்தையும் போட்டுக்கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி, தியானம் செய்தால்தான் மனது அடங்க ஆரம்பிக்கும்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

**கேள்வி: தியானம் செய்தால், ஞாபக சக்தி, concentration, புத்தி கூர்மை அதிகரிக்கும் என்கிறார்களே? இது உண்மையா?**

பதில்: தியானம் சரியாக செய்தால், ஞாபக சக்தி அதிகரிக்கும்; மனம் ஒருமுகமாகி புத்தி கூர்மையாகும்; மனதில் ஒரு தெளிவு பிறக்கும்; எந்த ஒரு விஷயத்தையும் குறித்து, ஆழமாக சிந்திக்கும் ஆற்றல் பெருகும். மேலும் தியானம் செய்வதால், இரத்த கொதிப்பு, மனதிலிருக்கும் பதட்டம் போன்றவை விலகி, அதனால் உடல் ஆரோக்யமும் உண்டாகும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இவை தியானத்தினால் ஏற்படும் அல்ப பலன்களே.

தியானத்தினால், தெய்வீக காட்சிகளும் அனுபவங்களும் ஏற்படும். இவை மத்யமமான பலன்கள்.

ஆனால், மஹான்களோ தியானம் செய்வதால் மோக்ஷமே சித்திக்கும் என்று சொல்கின்றனர். தியானம் செய்வதால், மோக்ஷம் கிடைப்பது என்பதுதான், அதன் உத்தம பலன்.

---

நிலத்தில் ஒரு விதையை விதைத்தால், விதைத்த விதையை பொறுத்து, அது முளைக்க சிறிது காலம் பிடிக்கிறது. பூமிக்குள்ளேயே அது விளைந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் கண்ணுக்கு தெரிவதில்லை. ஒருநாள் பூமியை பிளந்து கொண்டு, அது தண்டு, இலை, கிளை என முழு தோற்றத்துடன் வருகிறது. ஆதலால், அது பூமிக்குள்ளேயே விளைந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அப்படியே ஜபம், தியானம் செய்பவர்களுக்கும் சித்திகளும் சக்திகளும் ஏற்பட ஆரம்பிக்கும். அது முதலில் கொஞ்சமும் தெரியாது. ஆனால், முறையாக ஆன்மீக சாதனைகளை பயில்பவர்களுக்கு, ஒருநாள், சட்டென சித்திகளும் சக்திகளும் ஏற்பட்டிருப்பது தெரிய வரும்.

-- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



Please Subscribe to Madhuramurali - details on top of last page



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 1

–ஸ்ரீஸ்வாமிஜி 6

"எப்படி மனதை அடக்கினால் எனக்கு சீக்கிரத்தில் சித்த சுத்தி ஏற்பட்டு பகவத் தரிசனம் ஏற்படும்?" என்று கேட்ட பரீக்ஷித்திற்கு பலவிதமாக விராட்புருஷ தியானத்தை எடுத்து கூறி ஸ்ரீசுகர், "இவ்வாறெல்லாம் வர்ணித்தாலும், இதுதான் ஈஸ்வரனுடைய ரூபம் என்று நிர்ணயித்து கூறிவிட முடியாது. ஆனால், இதுவே சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளதால் எடுத்து சொன்னேன்" என்று கூறினார்.

ஒருவன் கனவு காணும்போது, பல நபர்களை பார்க்கின்றான். ஆனால் கனவு காண்பவன் ஒருவன் தானே! நாநாவிதமாக பிரபஞ்சம் தெரிந்தாலும், எப்படி கனவு காண்பவன் ஒருவனேயாவானோ, அந்த பரமாத்மாவும் ஒருவனேயாவான். ஒரு மனிதனே, பல நபர்களை தனது கனவில் சிருஷ்டி செய்வதுபோல், ஒரே பரம்பொருளான நாராயணனே, இந்த பல நாம ரூபங்களையுடைய பிரபஞ்சமாக தோற்றம் அளிக்கிறான். இவ்வளவு நாமரூபங்கள் இருந்தாலும் அவன் ஒருவனே. அந்த ஸத்தியப் பொருள் மற்றும் ஆனந்தத்தின் நிதியான பகவானையே பஜிக்க வேண்டும்.

வேறு இடம் மனம் திரும்பினால், மோக்ஷத்தின் பாதையிலிருந்து வழுவ நேரிடும். அது ஒருவனுடைய வீழ்ச் சியிலேயே முடியும். எவ்விதத்திலும், தியான வாழ்க்கையில் செல்லும் ஒருவன் மயங்கக்கூடாது. ஏனென்றால், பல விஷயங்கள் அவனை அதிலிருந்து இழுக்கப் பார்க்கும். சில ஸித்திகள் ஏற்படலாம், காட்சிகள் தெரியலாம், வியாதிகளை குணமாக்கும் சக்தி ஏற்படலாம். இதுபோல், பல முன்னேற்றங்கள் சம்பவிக்கலாம். ஆனால், மோக்ஷத்தில் மட்டுமே குறி உள்ளவன், இவை எவற்றிலும், மனதை விளையாட்டிற்குக் கூட செலுத்தக் கூடாது. அப்படி செய்தானானால் அதுவே அவன் வீழ்ச்சிக்குக்



Please Subscribe to Madhuramurali - details on top of last page

காரணமாகி விடும். இதையே சுகர் வலியுறுத்துகிறார்.

பாகவதத்தை ஏன் ஏழு நாட்களாக வைத்துள்ளார்கள் தெரியுமா? ஏனென்றால் வாரத்தின் ஏழு நாளில் ஏதோ ஒரு நாள் தான் ஒவ்வொரு மனிதனுக்கும் மரணம் ஏற்படும் அல்லவா? ஏழு நாளும் பாகவதம் படிப்பது என்று வைத்துக் கொண்டால், மரணத்தன்றும் பாகவதம் படித்ததாக ஆகும் அல்லவா? நமது கிழமைகளின் அமைப்பு எப்படி உள்ளது பார்த்தீர்களா?

முதலில் ஞாயிற்றுக்கிழமை - இதற்கான தேவதை சூரியன். சூரியன்தான் பித்ருகாரகன். அதனால் ஒரு ஜீவன், தந்தையிடம் இருந்தே, முதலில் தோன்றுவதால், முதல் நாள் ஞாயிற்றுக் கிழமையாக வைத்துள்ளார்கள். தந்தையிடமிருந்து ஜீவன் தாயின் வயிற்றிற்கு செல்வதால், இண்டாவதாக மாத்ருகாரகனான சந்த்ரனின் பெயர் கொண்ட ஸோமவாரம். மூன்றாவது நாள் ஜீவன் பூமியில் விழுகிறது. செவ்வாய் பூமிகாரகனாக இருப்பதால், மூன்றாவது நாள் செவ்வாய்க்கிழமை. பிறந்த ஜீவன் சிறிது சிறிதாக தன் அறிவை வளர்த்துகொள்வதால், நான்காவதாக புத்திகாரகனான புதனை ஒட்டி புதன்கிழமை. தான் பிறந்தது எதற்காக என்ற கேள்வி எழுந்து, ஒரு ஜீவன் குருவை நாடுவதால், ஐந்தாவதாக குருவாரம் என்று வைத்துள்ளார்கள். குருவின் வழிநடத்தலில் தர்மத்திற்கு உட்பட்டு போகங்களை ஜீவன் அனுபவிப்பதால், போககாரகனான சுக்ரனை அதிபதியாக கொண்ட வெள்ளிக்கிழமையை ஆறாவது நாளாக வைத்துள்ளார்கள். கடைசியில் மாரகனாக இருக்கும் சனியை அதிபதியாக கொண்ட சனிக்கிழமை. நமது சாஸ்திரத்தில், எவ்வளவு அழகாக நாட்களை ஒழுங்குபடுத்தி செய்திருக்கின்றார்கள்.

## அத்யாயம் 2

ஸ்ரீசுகர் மேலும் தொடர்கிறார், "இதுபோல் தீவிரமான தியானம் செய்துதான், முன்பு, ப்ரம்மா பகவானை ப்ரீதி அடையசெய்து, தான் மறந்த சிருஷ்டி விஷயங்களை வேதரூபமாக திரும்பப்பெற்றார். அதன்பின், முன்புபோலவே இந்த ஸ்ருஷ்டியை செய்தார்." ஸம்ஸ்க்ருதம் என்ற மொழி மிகவும் பிராசீனமானது என்று நாம் அறிவோம். ஸம்ஸ்க்ருதம் என்பதற்கே, நன்றாக


Please Subscribe to Madhuramurali - details on top of last page

செய்யப்பட்ட என்று பொருள். இதற்கும் மற்ற பாஷைகளுக்கும் என்ன வித்யாசம் தெரியுமா? மற்ற பாஷைகளில் ஒரு பொருள் தோன்றிய பின், அதற்கு பெயர் வைக்கப்படும். ஆனால், ஸம்ஸ் க்ருதத்திலோ அந்த வார்த்தை முன்பே ஆகாயத்தில் இருந்தது. அந்த வார்த்தைக்கு ஏற்ற பொருள் உண்டாயிற்று.

உதாரணத்திற்கு, அஜ: என்றால் ஆடு. அது ஆகாயத்தில் ஒலித்து ஒலித்து அதற்கு ஆடு என்னும் ஒரு மிருகத்தின் உருவை பெறுகிறது. இது ஒரு விஞ்ஞானம் தான். மீண்டும் மீண்டும் ஒரு சப்தத்தை உண்டு பண்ணுவதால், அதற்கு ஒரு ரூபம் வந்து விடுகின்றது. ஆக, வேதாந்த ரீதியாக சப்தமே முதலில் வந்தது. பின்புதான் ரூபம். வேத சப்தங்கள் மீண்டும் மீண்டும், ஆகாயத்தில் ஒலித்துக் கொண்டே இருப்பதால்தான், சிருஷ்டியே உண்டாயிற்று. அந்த வேத சப்தம், பகவானுடைய ஹ்ருதயத்திலிருந்து வெளிவந்து கொண்டே இருப்பதால், சிருஷ்டி உண்டாயிற்று.

ஒரு ஜீவன் வாஸனை பலத்தினால், இந்த சிருஷ்டியில் மாட்டிக்கொண்டு சுழல்கின்றது. ஒருகாலும் அது சுகத்தை அடைவதில்லை. இந்த உலகத்தில் உள்ள அல்ப சுகங்களிலேயே மாட்டிக் கொண்டுவிடுகிறான்.

ஆனால், விவேகி ஆனவன் பெயர் அளவிலேயே போகங்களை அனுபவிக்க வேண்டும். உலகத்தில் எதை எதை எல்லாம் பார்கின்றோமோ, அவற்றைப் பார்த்து, ரசிக்க வேண்டும். அதை நாமும் சொந்தமாக்கிக் கொள்ள நினைக்கும்போதுதான் ஆபத்து தொடங்குகிறது.

வாழ்க்கையில், எவ்வளவு பொருளால் தேஹ யாத்திரை நடக்குமோ, அவ்வளவு பொருள்களை மட்டுமே, நாம் வைத்திருக்க வேண்டும். பணக்காரர்கள் கூட, வேலை நிமித்தமாக வெளியூரில் சில காலம் தங்கினால், அவர்கள் வீட்டில் உள்ள வசதிகளை வைத்துக் கொள்வதில்லை. ஏன் என்றால், இது தற் காலிகமானது தான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதேபோல், வாழ்க்கையும், தற்காலிகமானதே என்று நாம் நினைவில்கொன்டால், இங்கேயும் நமக்கு குறைவான பொருட்கள்தான் தேவை என்று உணருவோம்.

(கனியும்)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

## *கருணையும் சக்தியும்*

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீவாமன ஜெயந்தி 15.9.2013 அன்று ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

---

வெட்டவெளியான ஆகாசத்தில், தானாக மேகங்கள் தோன்றுகின்றன. அவை கருமையாகவும் நீர் நிரம்பியும் இருக்கும். அதே சமயத்தில் குளிர்ந்தும் இலேசாகவும் இருக்கும். இப்படி குளிர்ந்து இலேசாக மிருதுவாக இருக்கும் மேகங்கள் இரண்டு, ஒன்றுடன் ஒன்று மோதினால் உருவாவதுதான் இடியும் மின்னலும். இடி முழக்கம் பயங்கரமாக இருக்கும். இப்படி தோன்றும் மின்னலில் இருக்கும் மின்சார சக்தி மிக அதிகமானது.

எந்த அளவு என்றால், ஒரே ஒரு மின்னலில் இருக்கும் மின்சாரம் மட்டுமே ஒரு நாட்டிற்கான, ஒரு வருடத்தின் மொத்த தேவையையும் பூர்த்தி செய்ய வல்லது என்றெல்லாம் கூட சொல்கிறார்கள். (மின்சாரத்தை தேக்கி வைக்கும் விஞ்ஞானம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அது இருந்தால், மின்சாரத்திற்கு பற்றாக்குறையே இருக்காது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், அவ்வப்பொழுதே செலவழிக்கப்பட்டு விடுகிறது.)

இத்தகைய பலத்தை தன்னுள் கொண்ட மேகங்கள், தாழ்வாக செல்கையில் மலையின் மேல் ஏறி நிற்கும் ஒருவரை ஊடுருவிக்கூட செல்லக்கூடும். ஆனாலும் ஊடுருவிபோவது தெரியாத அளவில், அவை மிருதுவாக இருக்கும்.

எப்படி பேராற்றலை தன்னுள் கொண்ட மேகங்கள், குளுமையாகவும் இலேசாகவும் இருக்கின்றனவோ, அப்படியே எங்கும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்திருக்கும் ப்ரும்ம ஸ்வரூபமான இறைவனிடமிருந்து தோன்றும் அவதார புருஷர்கள், இடி, மின்னல் போன்ற மகிமையை தங்களுக்குள் மறைத்து கொண்டு, மேகம் போன்று இலகுவாக எளிமையுடனும், மிக கருணையுடனும் பழகுகிறார்கள்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

## மஹாமந்திர நாமகீர்த்தன ஸப்தாஹ மஹோத்ஸவம்

கலயே சுந்தராகாரம் ஸதைக ப்ரிய தர்சனம்
அஞ்ஞான நாஷகம் தேவம் ஸத்குரும் முரளீதரம்

ஸ்ரீய:பதியான ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரத டாகுர்ஜீயின் பரமக்ருபையை முன்னிட்டும் நமது ஸத்குருநாதர் மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடனும் அவர்களது 52வது திருநக்ஷத்திரத்தையும் கோபாஷ்டமியையும் முன்னிட்டு தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் பிற மாநிலங்களிலுமுள்ள நமது G.O.D ஸத்ஸங்க அன்பர்களின் மஹாமந்திர நாமகீர்த்தன ஸப்தாஹ மஹோத்ஸவம் ஏழு தினங்கள் பின்வரும் நிகழ்ச்சிநிரலின்படி நடக்க இருக்கின்றது.



**மஹாரண்யம் மதுரபுரி ஆஸ்ரம பாகவத பவனத்தில்** எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரத டாகுர்ஜீயின் தர்பாரில் ஸ்வஸ்திஸ்ரீ விஜய வருடம் **ஐப்பசி 18 முதல் 24 முடிய (4.11.2013 முதல் 10.11.2013 வரை) காலை 6மணி முதல் மாலை 6மணி வரை** நடைபெற உள்ள **அகண்ட நாமகீர்த்தன வேள்வி**யில், பாகவத பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பகவத்க்ருபைக்கும் குருக்ருபைக்கும் பாத்திரர்களாகும்படி கேட்டு கொள்கின்றோம்.

---

**எந்த பகவானின் சந்நிதியில் தொடர்ந்து பல வருடங்களாக நாமகீர்த்தனம் நடைபெற்று வருகின்றதோ, அந்த சந்நிதியில் நாமும் கலந்து கொண்டு கீர்த்தனம் செய்வது நம் பாக்யமே!**



Please Subscribe to Madhuramurali - details on top of last page

| தேதி/ கிழமை | G.O.D ஸத்சங்க அன்பர்கள் கலந்து கொள்ளும் ஊர்களின் விபரம் |
|---|---|
| 4.11.2013 திங்கள் | கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தாராபுரம், பழனி, பொள்ளாச்சி, திருப்பூர், திண்டுக்கல், நெய்வேலி, சென்னை-1, ஸ்ரீபெரும்புதூர், ஆற்காடு, அரக்கோணம், திருத்தணி, ஆஸ்ரமம் சுற்றி உள்ள கிராமங்கள் |
| 5.11.2013 செவ்வாய் | மதுரை, பெரியகுளம், சிவகாசி, தேனி, விருதுநகர், அருப்புக்கோட்டை, பரமக்குடி, கெங்குவார்பட்டி, வத்தலகுண்டு, கம்பம், உசிலம்பட்டி, காரியாபட்டி, தாயில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6.11.2013 புதன் | தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், வீரவநல்லூர், கல்சுண்டு காலனி, வி.கே.புரம், ஆழ்வார்குறிச்சி, ரவணசமுத்திரம், கோவில்பட்டி, சேரன்மஹாதேவி, திருநெல்வேலி, வள்ளியூர், குலபதிசமுத்ரம், பாப்பாக்குடி, திருமலையப்பபுரம், பாப்பாங்குலம், முக்கூடல், நாங்குநேரி |
| 7.11.2013 வியாழன் | ஆம்பூர், அணைக்கட்டு, குடியாத்தம், பேர்ணாம்பட்டு, வாலாஜா, காவேரிப்பாக்கம், ஷோலிங்கர், ராணிப்பேட்டை, வேலூர் |
| 8.11.2013 வெள்ளி | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோவிந்தபுரம், திருவாரூர், திருத்துரைப்பூண்டி, காரைக்குடி, புலியூர், மயிலாடுதுறை, திருநாங்கூர், கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், சிங்கப்பெருமாள்கோவில் |
| 9.11.2013 சனி | பாண்டிச்சேரி, திண்டிவனம், பண்ருட்டி, கடலூர், காஞ்சிபுரம், செய்யார், மங்களூர், விழுப்புரம், சென்னை-2, புள்ளலூர் |
| 10.11.2013 ஞாயிறு | மும்பை, நாசிக், பாலக்காடு, பெங்களூரு, ஹைதராபாத், தர்மபுரி, சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை |



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# ஸ்ரீக்ருஷ்ண கவசம்

ஸ்ரீமத் பாகவதத்தின் ஆறாவது ஸ்கந்தத்தில், "நாராயண கவசம்" சொல்லப்பட்டுள்ளது. இந்த நாராயண கவசத்தை ஸ்ரத்தா பக்தியுடன் பாராயணம் செய்பவர்களுக்கு, எந்த சங்கடங்களும் விளையாது என்பது கண்கூடான உண்மை. அந்த நாராயண கவசம் போலவே, கீழே "க்ருஷ்ண கவசம்" சொல்லப்பட்டுள்ளது. இது, படிப்பதற்கு மிகவும் எளிமையானது. குழந்தைகள் கூட இதை எளிதில் மனப்பாடம் செய்து விடலாம். க்ருஷ்ண பக்தியுடன், தினமும் இதை பாராயணம் செய்து வருபவர்களுக்கு, எந்த விபத்தும் நேராது என்பது திண்ணம்.

## ஸ்ரீக்ருஷ்ண கவச ஸ்தவ:

**1. ஸ்ரீ க்ருஷ்ண கவசம் வக்ஷ்யே ஸ்ரீகீர்த்தி விஜயப்ரதம்**
**காந்தாரே பதி துர்கே ச ஸதா ரக்ஷாகரம் ந்ருணாம்**

ஸம்பத்து, புகழ், வெற்றி இவைகளை கொடுக்க வல்லதும், அடர்ந்த காட்டிலும், பெரிய அகழிகளிலும், செல்லும் வழியிலும், மனிதர்களுக்கும் பாதுகாப்பை செய்ய வல்லதுமான, ஸ்ரீக்ருஷ்ண கவசத்தை சொல்லப் போகிறேன்.

**2. ஸ்ம்ருத்வா நீலாம்புத ச்யாமம் நீலகுஞ்சித குந்தலம்**
**பர்ஹி பிஞ்ச லஸந் மௌலிம் சரச்சந்த்ர நிபாநநம்**

மயிற்தோகையினால் ஒளிர்கின்ற சிரஸை உடையவனும், கருமையான சுருண்ட தலைமுடிகளை உடையவனும், சரத்கால சந்திரனை நிகர்த்த முகத்தை உடையவனும், கார்முகில் போன்ற கருமை நிறமுள்ளவனும், (ஸ்ம்ருத்வா என்ற சொல்லை ஐந்தாவது செய்யுளில் இணைத்து பொருள் கொள்ள வேண்டும்).

**3. ராஜீவலோசநம் ராஜத் வேணுநா பூஷிதாதரம்**
**தீர்க்கபீந மஹாபாஹூம் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம்**

தாமரை மலர் போன்ற கண்களையுடையவனும், ப்ரகாசிக்கின்ற புல்லாங்குழலினால் அலங்காரம் செய்யப்பெற்ற உதட்டை உடையவனும், நீண்ட பருத்த பெரிய கைகளை உடையவனும்,


Please Subscribe to Madhuramurali - details on top of last page

ஸ்ரீவத்ஸம் என்ற மருவினால் அடையாளம் செய்யப்பெற்ற மார்பையுடையவனும்,

**4. பூபார ஹரணோத்யுக்தம் க்ருஷ்ணம் கீர்வாண பூஜிதம்**
**நிஷ்கலம் தேவதேவேசம் நாரதாதிபி ரர்ச்சிதம்**

பூமியின் பாரத்தை களைவதற்குரிய உடையவனும், தேவர்களால் வணங்க பெற்றவனும், உருவமற்றவனும், தேவர்களுக்கெல்லாம் தேவனாகத் தலைமை பூண்டவனும், நாரத மஹரிஷி முதலியவர்களால் ஆராதிக்க பெற்றவனுமான ஸ்ரீக்ருஷ்ணனை,

**5. நாராயணம் ஜகந்நாதம் மந்தஸ்மித விராஜிதம்**
**ஜபேதேவமிமம் பக்த்யா மந்த்ரம் ஸர்வார்த்த ஸித்திதம்**

உலகங்களுக்கு நாயகனும் புன்முறுவலினால் நன்கு பிரகாசிக்கின்றவனுமான நாராயணனை நினைத்து, பக்தியோடு கூட எல்லா செல்வங்களையும் நிறைய கொடுக்கவல்ல இந்த மந்திரத்தை இவ்வாறு ஜபம் செய்ய வேண்டும்.

**6. வஸுதேவஸுத: பாது முர்த்தாநம் மம ஸர்வதா**
**லலாடம் தேவகீஸுநுர் ப்ரு யுக்மம் நந்த நந்தந:**

வஸுதேவனுடைய புத்ரன் எப்பொழுதும் என்னுடைய சிரஸை காப்பாராக! தேவகியினுடைய புத்ரன் நெற்றியையும், நந்தகோபாலனுடைய பிள்ளை புருவங்கள் இரண்டையும்,

**7. நயநௌ பூதநா ஹந்தா நாஸாம் சகடமர்தந:**
**யமலார்ஜுந ஹருத் கர்ணௌ கபோலௌ நகமர்தந:**

பூதனையை அழித்தவன், இரண்டு கண்களையும், சகடாஸுரனை அடக்கியவன் நாசியையும், இரண்டு மருத மரங்களையழித்தவன் இரண்டு செவிகளையும், மலையை அடக்கியவன் இரண்டு கன்னங்களையும்,

**8. தந்தான் கோபாலக: பாது ஜிஹ்வாம் ஹய்யங்கவீநப்ருத்**
**ஓஷ்டம் தேநுகஜித் பாயாததரம் கேசிநாசந:**

கோபாலகன் பற்களையும், வெண்ணையை தரித்துள்ளவன் நாவையும் காப்பாராக! தேநுகனை வென்றவன் மேலுதட்டையும், கேசியை அழித்தவன் கீழுதட்டையும் காப்பாற்றட்டும்.

**9. அக்ரூர ஸஹித: கண்டம் கக்ஷௌ தந்திவராந்தக:**
**புஜௌ சாணூரஹாரிர் மே கரௌ கம்ஸநிஷூதந:**



Please Subscribe to Madhuramurali - details on top of last page

அக்ரூரரோடு சேர்ந்திருப்பவன் கழுத்தையும், யானை சிரேஷ்டத்திற்கு கால வடிவாயிருந்தவன் இரண்டு கக்ஷங்களையும், சாணூரனை அழித்தவன் என்னுடைய இரண்டு புஜங்களையும், கம்ஸனை கொன்றவன் இரண்டு கைகளையும்,

**10. வக்ஷோ லக்ஷ்மீபதி: பாது ஹ்ருதயம் ஜகதீஸ்வர:**
**உதரம் மதுராநாதோ நாபிம் த்வாரவதீபதி:**

லக்ஷ்மீபதியானவன் மார்பையும், உலகுக்கு தலைவன் ஹ்ருதயத்தையும், மதுராநாதன் வயிற்றையும், துவாரகாபதியானவன் நாபியையும் காப்பாராக!

**11. ருக்மிணீவல்லப: ப்ருஷ்டம் ஜகநம் சிசுபாலஹா**
**ஊரூ பாண்டவதூதோ மே ஜாநுநீ பார்த்தஸாரதி:**

ருக்மிணியினுடைய நாயகன் ப்ருஷ்டத்தையும், சிசுபாலனையழித்தவன் ஜகனத்தையும், பாண்டவதூதன் இரண்டு தொடைகளையும், பார்த்தசாரதி என்னுடைய இரண்டு முழங்கால்களையும்,

**12. விஸ்வரூப தரோ ஜங்கே ப்ரபதே பூமிபாரஹ்ருத்**
**சரணௌ யாதவ: பாது விஷ்ணு: பாத்வகிலம் வபு:**

விஸ்வரூபத்தை தரித்தவன் இரண்டு கணுக்கால்களையும், பூமியின் பாரத்தை அபஹரித்தவன் இரண்டு பாதக்குறடுகளையும், யாதவன் இரண்டு சரணங்களையும் காப்பாராக! எல்லா சரீரத்தையும் விஷ்ணு காப்பாராக!

**13. திவா பாயாஜ் ஜகந்நாதம் ராத்ரௌ நாராயண:ஸ்வயம்**
**ஸர்வகால முபாஸீத ஸர்வகாமார்த்த ஸித்தயே**

ஜகந்நாதன் பகலில் காப்பாற்றுவாராக! நாராயணன் தானாகவே இரவில் காப்பாராக! எல்லா விருப்பங்களுடைய பயனின் நிறைவின் பொருட்டு எல்லா காலத்திலும் உபாசிக்க வேண்டும்.

**14. இதம் க்ருஷ்ணபலோபேதம் ய: படேத் கவசம் நர:**
**ஸர்வதார்த்தி பயாந்முக்த: க்ருஷ்ண பக்திம் ஸமாப்நுயாத்**

க்ருஷ்ணனுடைய வலிமை பொருந்திய இந்த கவசத்தை எந்த மனிதன் படிக்கின்றானோ, அவன் எப்பொழுதும் துன்பத்தினுடைய பயத்திலிருந்து விடுதலை பெறுகின்றான். க்ருஷ்ண பக்தியையும் அடைகிறான்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**




**Gururam Consulting Private Ltd**



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# அத்வைத தத்வம்



உலகில் ப்ரம்மதேவர் முதல் புல் பூண்டு வரையிலும் உள்ள ஸகல ப்ராணிகளுக்கும், தன்னுடைய பலவிதமான துக்கங்களை போக்கிக்கொள்ள வேண்டுமென ஆசை இருந்து வருகிறது. இந்த ஆசையால், எல்லோரும் துக்க நிவர்த்திக்கு உபாயத்தை தேடி வருகிறார்கள். துக்கத்திற்கு காரணம் என்ன என்று விசாரம் செய்து, அதை விலக்கினால், துக்கம் அத்துடன் தொலையும்.

துக்கத்துக்கு காரணம் தேஹமே. "தேஹம் உள்ள வரையில் ப்ரியம், அப்ரியம் இவை நிவர்த்தியாகாது. தேஹமில்லாதவனுக்கே ப்ரிய அபிப்ராயங்கள் விலகும் என்று உபநிஷத் கூறுகிறது. தேஹாபிமானம் விட்டதும், இந்த துக்கம் கெட்டு விடும்.

நமக்கு தேஹம் ஏன் வந்தது எனில், ஜன்மாந்திரத்தில் செய்த புண்ணிய பாபங்களால்தான் வந்தது என்றுணர்க. புண்ணியம் என்பது வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களால் உண்டாகிறது. அவை சந்தியாவந்தனம், தேவ பூஜை முதலியன. பாபம் என்பது வேதத்தில் விலக்கப்பட்ட செய்கைகள். அவை ஸுராபானம், பரஸ்திரி கமனம் முதலியன.

வெறும் புண்யத்தால் தேவலோகத்தில் ஜன்மம் ஏற்படும். பாபம் மட்டும் இருந்தால், நரகம் கிடைக்கும். இரண்டும் சேர்ந்து, இந்த மனுஷ்ய உலகத்தில் மனிதனாக ஜன்மம் ஏற்படுகிறது.

இம்மாதிரி ஸத்காரியங்களிலும், கெட்ட காரியங்களிலும் ஜனங்கள் ஈடுபடுவானேன்? அதற்கு காரணம் முறையே சோபனாத்யாஸமும், அசோபனாத்யாஸமும் என்று கூறுவர்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

சோபனாத்யாஸமாவது இந்த வஸ்து நன்றாக இருக்கிறது. இதை நாம் அனுபவிக்க வேண்டும் என்ற விபரீத புத்தி. இந்த வியாபாரம் செய்தால் லாபத்தை அடையலாம். இந்த கர்மாக்களை செய்தால், புண்ய லோகங்களை அடையலாம் என்றால், அசோபனாத்யாஸமாவது மதுபானம் முதலிய விலக்குகளில் 'இது நன்றாக இருக்கிறது; இதை அனுபவிப்போம்' என்ற தோற்றம் - இது பாபகர்மாவில் ஈடுபட காரணம்.

இந்த அத்யாஸம் என்ற விபரீதத்திற்கு மூலம், அஞ்ஞானம். ஆத்மஸ்வரூபத்தை சரியாக அறியாமைதான் அஞ்ஞானம். ஆகவே, உலகிலுள்ள சகல துக்கங்களுக்கும் மூலம் அஞ்ஞானமே ஒழிய வேறில்லை. அந்த அஞ்ஞானத்தை ப்ரம்ம ஞானத்தால் போக்க வேண்டும். ப்ரம்ம ஞானமோ உபநிஷத்துக்களாலும், உபநிஷதார்த்தங்களை விவரிக்கும் புஸ்தகங்களாலும் ஏற்பட வேண்டும்".

- காஞ்சிமஹாஸ்வாமிகள்

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் – 10

சென்னை ராமகிருஷ்ணா மடம் – ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

ராமகிருஷ்ணர் சொல்லும் ஒவ்வொரு விஷயத்தையும், கவனமாக, முழுமையாக ஏற்பார் சசி. சூபி கவிதைகளின் அழகு பற்றி நரேன் ஒருமுறை சசியிடம் சொல்ல, உடனே அதை அனுபவிக்க பாரசீக மொழியையே கற்க முயன்றார் சசி. அப்பொழுது ராமகிருஷ்ணர் அவரை ஓரிருமுறை கூப்பிட்டும், சசி கவனிக்கவில்லை. உடனே ராமகிருஷ்ணர், "சசி, நீ இப்படி இருந்தால், உன்னிடம் இருக்கும் கொஞ்ச நஞ்ச பக்தியும் போய் விடும்" என்றார். மறுகணம், அந்த பாரசீகம் கற்கும் விஷயத்தையே மூட்டை கட்டி, தூக்கி போட்டு விட்டார் சசி.



Swami Ramakrishnananda

ஒருமுறை, சசி கங்கைக்கு குளிக்க போகையில், ராமகிருஷ்ணர், அவரிடம், "சசி! நீ யாரை தேடுகிறாயோ அது இங்கே இருக்கிறது. அது நான்தான்" என்றார். அதை கேட்டதிலிருந்து, சசி முழுவதுமாய் மாறி விட்டார். அவர் காசி, பிருந்தாவனம் என்று எந்த ஒரு யாத்திரையும் மேற்கொண்டவரில்லை. கணபதி, முருகன் சரித்திரத்தில், முருகன் மயிலில் உலகம் சுற்றி வரும் முன், பிள்ளையார் தாய்,தந்தையரை வலம் வந்து பழம் பெற்றார் என்று வரும். அதுபோல், நரேன் உலகை சுற்றி வந்தார். சசியோ ராமகிருஷ்ணருக்கே தன்னை அர்ப்பணம் செய்து வாழ்ந்தார்.

ஒரு பதிவ்ரதை எப்படி கணவனுக்கு பணிவிடை செய்வாளோ, அப்படி சசி, ராமகிருஷ்ணருக்கு செய்தார். ராமகிருஷ்ணருக்கு ஐஸ் பிடிக்குமே என்று, ஒருமுறை 5,6மைல் தொலைவில் இருந்து, ஐஸ் வாங்கி வந்தார் சசி. அது கரைந்து விடக்கூடாதே என்று ஐஸ் மேல் துண்டை கட்டிக்கொண்டு,



Please Subscribe to Madhuramurali - details on top of last page

வாங்கி வந்தார். அவர் வந்தவுடன், ராமகிருஷ்ணர், "சசி என் உடம்பு எரிகிறது. எனக்காக ஐஸ் வாங்கி வந்த உன் கால்களில் கொப்புளம் வெடித்து இருக்கிறதே. அதனால்தான் என் உடம்பு எரிகிறது" என்றார்.

பின்னால், காசிப்பூர் கார்டனில் ராமகிருஷ்ணருக்கு, மூன்று வருடங்கள் இரவு பகலாக சேவை செய்தார் சசி. அவரை கழுத்தை பிடித்து வெளியில் அனுப்பினாலும், அவர் செல்ல மாட்டார்.

அந்த காலத்தில் ஒருமுறை சசி, ராமகிருஷ்ணரின் கழிவுகளை சுத்தம் செய்து விட்டு, வந்து படுத்து கொண்டார். எழுந்திருக்கவே முடியாமல், படுத்து கொண்டிருந்த ராமகிருஷ்ணர், மேலே இருந்த ஒரு போர்வையை எடுத்து, சசியின் மேலே போட பார்த்தார். படுத்து கொண்டிருந்த சசி, ராமகிருஷ்ணருக்கு குளிருகிறது; அதனால் போர்வையை தேடுகிறார் என்று நினைத்தார். கொஞ்சம் உரிமையுடன், "போர்வையை என்னிடம் கேட்டால் நான் எடுத்து தர மாட்டேனா என்ன? ஏன் இப்படி கஷ்டப்படுகிறீர்கள்? " என்றார் சசி.

உடனே ராமகிருஷ்ணர், "அது இல்லை சசி. வெளியில் சென்று வந்தாய் அல்லவா? உனக்கு குளிராக இருக்கும். உன் மேல் போர்வை போர்த்தலாம் என்று பார்த்தேன்" என்றார். அதை கேட்டவுடன் சசி அழுது விட்டார். அந்த மூன்றாண்டு காலமும், மிக மிக சிரத்தையாக ராமகிருஷ்ணருக்கு சேவைகள் செய்தார் சசி.

சசிக்கு வெப்பம், குளிர் இரண்டும் படுகையில், அதை ராமகிருஷ்ணர் உணர்ந்தார். அதேபோல் ராமகிருஷ்ணர் திருவுருவத்திற்கு, சசி கோடைக்காலத்தில் விசிறிக்கொண்டே இருப்பார். ராமகிருஷ்ணருக்கு வெய்யில் பாதிக்கிறது என்று சீடர் உணர்ந்தார். சென்னைக்கு ராமகிருஷ்ணரை கொண்டு வருகையில், மழை பெய்ததால், குடை பிடித்து கொண்டுதான் வந்தார் சசி. குருதேவர் நனைவாரே அவருக்கு குளிருமே என்று, அன்றிரவு முழுவதும் குடை பிடித்து கொண்டு இருந்தார். குருவின் ஸ்வரூபமும், இத்தகைய உத்தம சிஷ்ய ஸ்வரூபமும், வேறு அல்ல என்பதைத்தான் இது காட்டுகிறது அல்லவா?

(தொடரும்)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# ஆஸ்திரேலிய ஆலயத்தில் ஸ்ரீ ப்ரேமிகவரதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன், ஆஸ்திரேலியாவில், அக்டோபர் 15 முதல் 31 வரையிலான பல சத்சங்கங்களில் கலந்து கொள்வதற்காக பாக்யநாதன்ஜி சென்றிருந்தார். அக்டோபர் 18 அன்று, சிட்னி, ஆஸ்ட்ரலில், நியூசவுத்வேல்ஸ் ஸ்ரீஸநாதன தர்ம சபா ஆஸ்திரேலியா நிறுவிய புதிய ஸ்ரீராம்கிருஷ்ணா கோவிலில், மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆராதித்து அனுப்பி தந்த, ஸ்ரீமாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனை, குருநாதரின் திருவுள்ளப்படி, பாக்யாஜி ஸ்தாபித்தார். இந்தியாவிற்கு வெளியே ஒரு பொது கோவிலில், மூலஸ்வாமியாக ஸ்ரீப்ரேமிகவரதன் எழுந்தருள்வது இதுவே முதல்முறையாகும். இவ்வைபவத்தில், "என்னாசைகளை கேட்பாயோ கண்ணா .. என்ற பாடலில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், உலகம் முழுவதும் ப்ரேமிகவரதனின் புகழ் சூழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசையானது, பூர்த்தி ஆகி வருவதையே நாம் பார்க்கிறோம்" என பாக்யாஜி பேசினார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதிவு செய்யப்பட்ட வீடியோ அருளுரை, வந்திருந்த பக்தர்களுக்கு காண்பிக்கப்பட்டது. மறுநாள், ஸ்ரீப்ரேமிகவரதனுடன் தியானம் செய்யும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவப்படத்தையும் பாக்யநாதன்ஜி அதே கோயிலில் திறந்து வைத்தார்.

பின்னர் "மதுரஸ்மரணம்" - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திவ்ய சரித்திரத்தை அவர் ஜெர்ரிப்ரூக் - ஸ்ரீப்ரேமிகவரதனின் சன்னதியில் அன்பர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் மெல்போர்னிலும் பல சத்ஸங்கங்களில் அவர் பங்கேற்றிருந்தார். விவரங்களுக்கு நாமத்வார் இணையதளத்தை காண்க.

**அக்டோபர் 28** - சிட்னியில் நமது GOD AUSTRALIA - விற்கு சொந்தமான பூமியில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய நவரத்தினங்களையும், அன்பர்கள் லேகனம் செய்த மஹாமந்திர ஏடுகளையும் வைத்து, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவ படத்திற்கு பூஜையுடன், **ஆஸ்திரேலிய நாமத்வாருக்கான பூமி பூஜை,** பாக்யாஜி முன்னிலையில் நடைபெற்றது. கட்டிட வேலைகள் துவங்கின. இதில் AUS, NZ, PNG, Fiji நாட்டு அன்பர்கள் வந்து கலந்து கொண்டனர்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

## சனாதனப்புதிர் பகுதி 56 - கேள்விகள் - ஆத்ரேயன்

1. அர்ஜுனனின் நான்கு மனைவிகள் மேலும் அவர்களுக்கு பிறந்த நான்கு பிள்ளைகளின் பெயர் என்ன?
2. ஊர்வசி - புரூரவஸ் இவர்களின் ஆறு குமாரர்கள் யார்?
3. மார்க்கண்டேய மகரிஷியின் மனைவி பெயர் என்ன?
4. மேனகாவின் குழந்தைகளின் பெயர் என்ன?
5. பாண்டவர்கள் சாதுர்மாஸ்ய விரதத்தை கடைப்பிடித்தார்கள். எங்கு? எப்போது?
6. சாந்திரமஸி என்று யார் அழைக்கப்படுகிறாள்?
7. மந்தபால ரிஷியின் மனைவியான ஜரிதா நான்கு பக்ஷி ரூபத்தில் பிறந்த குழந்தைகளின் பெயர் என்ன? அக்னி தேவனை வேண்டி எந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டார்கள்?
8. துலாதார் இவர் யார்? இவர் யாருக்கு உபதேசம் செய்தார்?
9. கலிங்கராஜா ஸ்ருதாயுவின் சகோதரன் பெயர் என்ன? மஹாபாரத போரில் யாரால் கொல்லப்படுகிறான்?
10. வஸுதேவரின் மனைவிகள் யார்?


## விடைகள்

1. திரௌபதி, உலூபி, சித்ராங்கதா, சுபத்ரா; ஸ்ருதகீர்த்தி, இராவான், பப்ருவாஹனன், அபிமன்யு.
2. வாயு:, தீமான், அமாவஸு, த்டாயு: , வனாயு:, சதாயு:.
3. தூமோர்ணா
4. கந்தர்வராஜன் விஸ்வாவஸு மூலம் பிரமத்வரா என்ற பெண் - ஸ்தூலகேசி ரிஷியின் ஆஸ்ரமத்தில் விடப்பட்டாள். விஸ்வாமித்ரர் மூலமாக சகுந்தலை - கண்வ ரிஷியின் ஆஸ்ரமத்தில் விடப்பட்டாள்.
5. கயாவில், வனவாசம் பொழுது (வன பர்வா).
6. பிரஹஸ்பதியின் மனைவியான தாரா; தாரா சந்திரனோடு இருந்த சமயம் சாந்த்ரமஸி என்று அழைத்தார்கள்.
7. ஜரிதாரி, சாரிஸ்ருக், ஸ்தம்பமித்ர, த்ரோண் என்ற 4 பறவைகள். காண்டவ வனத்தை எரிக்கும்பொழுது ஜரிதாவின் வேண்டுதலால் 4 பறவைகள் காப்பாற்றப்பட்டன.
8. காசியில் வசிக்கும் வைஸ்யன், தர்மாத்மா. ஜாஜலி முனிவருக்கு தர்மத்தை உபதேசிக்கிறார். பிறகு துலாதார் மற்றும் ஜாஜலி முனிவர் ஸ்வர்க்கத்தை அடைகின்றனர். சாந்தி பர்வா.
9. தீர்க்காயு - அர்ஜுனனால் (த்ரோண பர்வா)
10. தேவகி, பத்ரா, ரோஹிணி, மதிரா மற்றும் பலர் (மௌசல பர்வா)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# பாலகர்களுக்கு ஒரு கதை



## தயார் நிலை!

மாதவன் ஒரு விவசாயி. அவனுக்கு கடற்கரை ஓரம் பண்ணை நிலம் ஒன்று சொந்தமாய் இருந்தது. கடற்கரை அருகே என்பதால் புயல் காற்று பெரு மழையுடன் வீசும். அதிலும் அவனிருந்த இடத்தில் அடிக்கடி நிகழும். அப்படி வரும் காற்றும் மழையும் கால்நடைகளையும், அதற்கான தீவனத்தையும், பயிரையும் நாசம் செய்து விட்டு போய் விடும். ஒவ்வொரு வருடமும் இது வழக்கமாய் இருந்ததால், மாதவனுக்கு பலத்த நஷ்டமும் கஷ்டமும் இருந்தது. அவன் தன் பண்ணையில் வேலை செய்ய ஒரு நல்ல வேலையாளை தேடினான். அதற்காக பலரிடம் சொல்லி வைத்து இருந்தான்.

அவனிடம் வேலை தேடி வருவோரெல்லாம் அந்த கடற்கரையில் அடிக்கும் காற்றுக்கு பயந்து வேலைக்கு வராமல் போயினர். அவர்கள் அனைவருக்கும் அந்த காற்று என்ன செய்யும் என்பது புரிந்தே இருந்தது. மாதவன் தன் வாழ்வை நொந்தவாறு இருந்தான்.

அப்படி இருக்கையில், சற்றே குள்ளமாக நீலன் என்றொருவன் வேலை தேடி வந்தான். அவனை பார்த்து மாதவன் "என்னப்பா, வேலையை பற்றி விவரம் தெரிந்தேதான் வந்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

நீலன் அதற்கு "அய்யா! நான் அனுபவசாலி. என்னால் புயல்காற்று பலமாக அடிக்கும்பொழுதும் நிம்மதியாக கவலையின்றி தூங்க முடியும். கவலைப்படாதீர்கள். வேலை என்ன என்று தெரிந்தே வந்திருக்கிறேன்" என்றான். மாதவனுக்கு அவன் சொன்னது முழுக்க புரியவில்லை. இருப்பினும் வேலை செய்கிறேன் என்று ஒருவனாவது வந்தானே என்ற சந்தோஷத்தில், அவனை வேலைக்கு சேர்த்து கொண்டான்.

நீலனும், பண்ணை நிலத்தில், அபாரமாக காலை முதல் மாலை வரை ஓய்வின்றி தினமும் வேலை செய்தான். அதை



Please Subscribe to Madhuramurali - details on top of last page

பார்த்து மாதவனும் "நல்ல ஆள் இவன்" என்று நினைத்தான். அவனுக்கு திருப்தியாக இருந்தது. இப்படியே காலம் கழிந்து கொண்டு இருந்தது.

ஒருநாள், இரவில் காற்று பலமாக வரப்போவதற்கு அறிகுறியாக பலத்த சப்தம் கேட்டது.

அதை கேட்ட உடனேயே பதறி அடித்து கொண்டு மாதவன் படுக்கையில் இருந்து எழுந்தான். ஒரு விளக்கை கையில் ஏந்தியவாறு, நீலன் படுத்திருந்த இடத்திற்கு விரைந்தான். நீலனை பலமாக தட்டி எழுப்பி "அடேய்! காற்று பலமாக வீச போகிறது. உடனே எல்லாவற்றையும் நன்றாக கட்டி வை. இல்லாவிடில், எல்லாம் நாசமாக பறந்து போய் விடும்" என்றான். நீலனோ புரண்டு படுத்தவாறே "அய்யா! நான் முன்னரே உங்களிடம் சொன்னேனே! என்னால் பலத்த காற்றடித்தாலும் அதை பொருட்படுத்தாமல் உறங்க முடியும்" என்றான்.

"என்ன இது பொறுப்பற்றவனாய் பேசுகிறாய். விடியட்டும். உன்னை உண்டு, இல்லை என செய்து விடுகிறேன்" என்றவாறே மாதவன் விளைநிலத்திற்கு ஓடினான். அங்கு, அவன் கண்ட காட்சி வியப்பாய் இருந்தது.

மழையினால் பாதிப்பு வராதவாறு, வைக்கோல் நன்கு பாலிதீன் பைகளால் சுற்றி கட்டப்பட்டு இருந்தது. மாடுகள் எல்லாம், தொழுவத்தில் பாதுகாப்பாய் கட்டப்பட்டு இருந்தன. கோழிக்குஞ்சு ஒன்றாவது கூண்டை விட்டு வெளியே இல்லை. மேலும், அதனதன் கதவுகள் இறுக தாளிடப்பட்டு இருந்தது. பயிர் நடப்பட்ட இடத்திலோ, மழை நீர் ஓடி செல்ல நல்ல வசதி செய்யப்பட்டு இருந்தது. அதை பார்த்த உடனேயே காற்றினாலும் மழையினாலும் சேதம் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டுமோ, அது செய்யப்பட்டு இருக்கிறது என்று மாதவனுக்கு புரிந்தது. நீலன் பதட்டப்படாமல் தூங்குவதன் காரணமும், அப்பொழுதுதான் அவனுக்கு புரிந்தது. அவனும் தன் பதட்டம் நீங்கி நிம்மதியாய் உறங்க போனான்.

போகும் வழியிலேயே அவன் நீலனை மெச்சி கொண்டே போனான். "இவன் வரப்போகும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை தயார்படுத்தி கொண்டு அல்லவா



Please Subscribe to Madhuramurali - details on top of last page

இருந்திருக்கிறான். இப்படித்தானே இருக்க வேண்டும். புயல் வந்த பின், இவற்றை எல்லாம் சரியாக செய்திருக்கவே இயலாது அல்லவா. நாமும் இப்படியே வருமுன் காக்க வேண்டும்" என்று முடிவு செய்து கொண்டான்.

பாலகர்களே! அப்படித்தான் நாமும் எந்தவொரு காரியம் செய்ய ஆசைப்பட்டாலும் அதை நாளைக்கு செய்து கொள்ளலாம் என்று இருந்து விடாமல் அதற்கான ஆயத்தங்களை அவ்வப்பொழுதே செய்து நம்மை தயார்படுத்தி கொள்ள வேண்டும். உதாரணமாக தேர்வு வருமுன்னரே, அதற்காக நன்கு படித்து தயார் படுத்தி கொள்பவன் எதற்காக கவலைப்படுவான்? தயார் நிலையில் இருந்தால், உங்களுக்கு நிம்மதியாக உறக்கம் வரும் அல்லவா! இப்படியே நல்ல வேலை, வியாபாரம், மேற்கல்வி என ஒவ்வொரு விஷயத்தையும் எதிர்கொள்ள வேண்டும். நம்மிடம் திறமை மட்டும் இருந்தால் போதாது. காரியம் செய்வதற்கான தயார் நிலைமையும் அல்லவா இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் வாய்ப்பு வருகையில் அதை நம்மால் சரியாக பயன்படுத்திக்கொண்டு, எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்க முடியும்!


**New Releases from**
**Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra**

**அழைக்கின்றான் அரங்கன் டிவிடி, ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் புத்தகம்**







**Available at MADHURAM,** 38/22,
Thambaiya Street Extn, West Mambalam,
Chennai - 33. **Ph- 044-23727400**





Please Subscribe to Madhuramurali - details on top of last page




# Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology and Diabetes**
**Regn. No 62256**

## ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**
**www.chennaiendocrine.com**

**அக்டோபர் 5 - 13** - மதுரபுரி பாகவதபவனத்தில் நவராத்திரி உற்ஸவம் மிக சிறப்பாக ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. தினமும் ஸ்ரீப்ரேமிகவரதன் முன் காலையில் வேதாத்யயனம் நடைபெற்றது. மாலையில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஊஞ்சலில் அலங்காரத்துடன் எழுந்தருளினான். கீர்த்தனங்கள் பாடப்பட்டன. மூன்று வேளையும் வந்திருந்த அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. அக்டோபர் 5 மாலை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவிலில் அருளுரை வழங்கினார்கள்.

**அக்டோபர் 13** - சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாளின் அவதார உற்சவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்து சிரவண தீபம் ஏற்றி, வந்திருந்த அனைவருக்கும் தீர்த்தப்ரசாதம் வழங்கினார்கள். அன்று மாலை திருநின்றவூர் அருகே உள்ள வேப்பம்பட்டு அஷ்டசாஸ்தா கோவிலில் அருளுரை வழங்கினார்கள்.

**அக்டோபர் 16 - 22** - பெங்களூரு ஜே.பி.நகர் ஆர்.வி.டென்டல் காலேஜில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் "பாகவத கதா" உபன்யாசம் செய்தருளினார்கள். காலை பாகவத பாராயணம் நடைபெற்றது. திரளான அன்பர்கள் வந்து சிரவணம் செய்து திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.

**புரட்டாசி, ஐப்பசி** - புரட்டாசி சனிக்கிழமை தோறும் மஹாரண்யம் ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாள், மதுரபுரி ஆஸ்ரமம் சுற்றி உள்ள கிராமங்களுக்கு புறப்பாடு கண்டருளினார். புரட்டாசி கடைசி சனிக்கிழமை **அக்டோபர் 12** அன்று ஆயிரக்கணக்கான அன்பர்கள் பல ஊர்களிலிருந்து, மஞ்சள் ஆடை உடுத்தி, மாலை அணிந்து, விரதம் இருந்து வந்திருந்தனர். பெருமாள் சன்னதியில் அகண்ட தீபம் ஏற்றி விரதத்தை பூர்த்தி செய்தனர். அன்றைய மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு, வந்திருந்தோரை ஆசீர்வதித்து அருளுரை வழங்கி அனைவருக்கும் தம் கரங்களாலேயே லட்டு பிரசாதம் வழங்கினார்கள். மகாளய அமாவாசை அன்று கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமாருக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

வடைமாலையும் சாற்றப்பட்டது. புரட்டாசி மாதம் முழுவதும், ஸ்ரீ கல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவில் உற்சவர் ஸ்ரீராமரை, திரு.பம்மல் பாலாஜி ஆஸ்ரமம் சுற்றி உள்ள பல கிராமங்களுக்கு எழுந்தருள செய்து சத்சங்கம் நிகழ்த்தினார்.

**அமெரிக்காவில் சத்சங்கம்**

ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன், **அமெரிக்காவில்** செப்டம்பர் 27 முதல் டிசம்பர் 28 வரையிலான பல **சத்சங்கங்களில்** கலந்து கொள்வதற்காக ராமானுஜம்ஜி சென்றுள்ளார். குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி அமெரிக்கா சார்பாக, செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 6 வரை ராதாகல்யாணம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாகவத தர்மம் குறித்த சத்சங்கங்களில் கலிபோர்னியாவில் கலந்துகொண்டார். அக்டோபர் 13 வரை ராமானுஜம்ஜி பாகவத தர்ம சாரம் குறித்த சத்சங்கங்களையும், இளைஞர்களுக்கான தலைமைப்பயிற்சி முகாமையும் விர்ஜினியாவில் நிகழ்த்தினார். அக்டோபர் 22 வரை நியூயார்க் மற்றும் நியூஜெர்சியில் பாகவதத்தில் வரும் பல பக்தர்களை குறித்து, சிறப்பு சத்சங்கங்களை நிகழ்த்தினார். இடையில் கோபகுடீர குழந்தைகளுக்கான பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றில் எல்லாம் கலந்துகொண்டு அவர் குழந்தைகளை உற்சாகப்படுத்தினார். அமெரிக்காவில் மேலும் பல சத்ஸங்கங்களில் ராமானுஜம்ஜி கலந்துகொள்ள உள்ளார். விவரங்களுக்கு நாமத்வார் இணையதளத்தை காண்க.

**அக்டோபர்** 4-13 - நவராத்திரி நாட்களிலும் ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகத்தன்றும் மதுரபுரி ஆஸ்ரமம் சார்பாக அமரம்பேடு, சோமங்கலம், கருணாகரச்சேரி, மணிமங்கலம், கரசங்கால், மண்ணிவாக்கம், கீழ்படப்பை, மேல் படப்பை, நாவலூர் ஆகிய ஊர் கோவில்களில், சிறப்பு அபிஷேகமும் வழிபாடும் ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் நடைபெற்றது. நவராத்திரி காலத்தில் ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் முரளிஜி சுந்தரகாண்ட உபன்யாசமும் செய்தார்.

**அக்டோபர்** 5, முரளிஜி முன்னிலையில் அண்ணாநகர் நாமத்வார் சார்பாக சென்னை அமைந்தகரை ஸ்ரீப்ரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் இருந்து **நகரசங்கீர்த்தனம்** நடைபெற்றது. வீதி பஜனையின் முடிவில் கோவிலில் அழகான மஹாமந்திரகூட்டு பிரார்த்தனையையும் முரளிஜி நிகழ்த்தினார். இதில், சுமார் 200 அன்பர்கள் கலந்துகொண்டனர்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- *ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -11

பூரி க்ஷேத்திரத்தில் க்ருபாஸிந்துதாஸ் பாபாவிற்கு வழிதுணையாகவும் நண்பராகவும் கிடைத்த ஸ்ரீநித்யானந்ததாஸ் பாபாவும் இப்போது ப்ருந்தாவனம் வந்து சேர்ந்தார். குஸும ஸரோவர் அருகில் ஒரு குடிலை அமைத்துக் கொண்டு க்ருபாஸிந்துதாஸ் பாபாவின் உபதேசத்தின்படி, அவர், லீலா ஸ்மரணம் செய்யலானார். முன்பே இவர் மிகவும் வெகுளியானவர் என்றும், மிகவும் எளிமையானவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறோம். இதனால் அவருக்கு லீலா ஸ்மரணத்தில் மிகவும் எளிதாக ஸித்தி ஏற்பட்டது.

அவர் தினமும் க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடம் சென்று தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்வார். ஒரு முறை பல நாட்களுக்கு க்ருபாஸிந்துதாஸ் பாபாவிற்கு இவரது தரிசனம் கிடைக்கவில்லை. இதன் காரணத்தை அறிய அவரது குடிலுக்கு க்ருபாஸிந்துதாஸ் பாபா தானாகவே சென்றார். ஸ்ரீநித்யானந்ததாஸ் பாபா உபயோகித்த மண்ணாலான தீர்த்த பாத்திரம், ஆஸனம் மற்றும் இதர ஸாமான்கள் அங்கேயே இருந்தன. அவரது ஆஸனத்தில் முடி போடப்பட்ட ஒரு இடுப்பு வஸ்திரம் இருப்பதைக் கண்டார். அந்த வஸ்திரத்தைப் பார்த்தால் நித்யானந்ததாஸ் பாபா ஒரு பாம்பு தனது சட்டையிலிருந்து வெளியேறுவது போல், தனது வஸ்திரத்திலிருந்து, அதை அவிழ்க்காமல், அப்படியே நழுவி சென்றிருப்பது போல் தோன்றியது. இதன்பின் நித்யானந்ததாஸ் பாபாவை யாரும் எங்கும் பார்க்கவில்லை. ராதா ராணியின் க்ருபையால் அவர் பூத உடலுடனே திவ்யதாமத்தை அடைந்துவிட்டார் என்றே க்ருபாஸிந்துதாஸ் பாபா கருதினார்.

மீண்டும் பண்டித்பாபா, ஒரு முறை உடல் நலமில்லாமல் ஆன பொழுது க்ருபாஸிந்துதாஸ் பாபா அவரை ப்ருந்தாவனம் அழைத்துச் சென்றார். சில காலத்திற்கு பின் பண்டித பாபா இங்கேயே சரீரத்தை த்யாகம் செய்துவிட்டார். பண்டித பாபாவின்



Please Subscribe to Madhuramurali - details on top of last page

மறைவிற்கு பின்னர் க்ருபாஸிந்துதாஸ்பாபாவால் குருவின் விரஹத்தை தாங்க முடியவில்லை. உணவு, தூக்கம், தண்ணீர் எல்லாவற்றையுமே மறந்தார். சரீரத்தை த்யாகம் செய்துவிடுவது என்ற நிச்சயத்தோடு அவர் ஆஸ்ரமத்திலிருந்து வெளியேறினார். பசி-தாகத்தால் வாடியபடியே பர்ஸானா வந்தடைந்தார். மிகவும் களைத்துப்போனதால் அவர் ஸ்ரீஜீயின் கோவில் படிகளிலேயே அப்படியே சாய்ந்துவிட்டார். அங்கு கிடந்தபடியே இந்த உடலை எப்படி விடலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்தார். அப்பொழுது சற்றே மயக்கம் அடைந்தார்.

அந்த நிலையில் அவர் பண்டித பாபா தன்னிடம் பேசுவதைக் கண்டார், "உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா என்ன? ஸேவை செய்ய உபயோகமான உபகரணமான இந்த சரீரத்தை த்யாகம் செய்துவிட்டு, ஸ்ரீஜீயின் ஸேவையை எப்படி செய்வாய்? இதுதான் நான் உனக்கு கற்பித்ததா? ஸேவை செய்வதற்காக அளித்த வஸ்துவை உனது இஷ்டம் போல் கையாளலாம் என்ற பாடத்தைதான் நீ என்னிடமிருந்து கற்றாயா?" என்று பண்டித பாபா கேட்டார்.

பண்டித பாபாவின் இந்த தரிசனம் மற்றும் உரிமையான அன்புடன் கூடிய கடுமைச் சொற்களை கேட்டபின் க்ருபாஸிந்துதாஸ்பாபா சற்று மனம் தெளிந்தார். சரீர த்யாகம் செய்ய நினைத்ததை எண்ணி வெட்கித்தார். க்ருபாஸிந்துதாஸ் பாபாவின் பக்தர்கள் அவருக்காக அமைத்து தந்த பாகவத-நிவாஸ் எனும் இடத்தில் க்ருபாஸிந்துதாஸ் பாபா தனது வாழ்வின் மீதமிருந்த நாட்களை செலவழித்தார்.

பாகவத-நிவாஸ் ஸ்ரீகௌராங்கதாஸ் பாபாவின் ஸமாதியான ஸ்ரீராதாரமண நிவாஸின் அருகில் உள்ளது. கௌராங்கதாஸ் பாபாவின் மறைவுக்கு பின் ராதாரமண நிவாஸில் இன்று வரை அகண்ட ஹரி நாம கீர்த்தனம் நடக்கிறது. ஒரு நாள் இரவு சுமார் இரண்டு மணிக்கு கீர்த்தனம் செய்து கொண்டிருந்த ஸாதுக்கள் சற்று கண் அயர்ந்துவிட்டார்கள். அதே சமயம் க்ருபாஸிந்துதாஸ் பாபாவிற்கு ஒரு கனவு தோன்றியது. கனவில் ஸ்ரீகௌராங்கதாஸ் பாபா அவரிடம், "எனது ஆஸ்ரமத்தில் கீர்த்தனம் நின்றுவிட்டது. நீ போய் அவர்களை எழுப்பு" என்று கூறினார்.

(தொடரும்)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# மாலே மணிவண்ணா - 122



—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

இளவெய்யிலுக்குள் இருள் வளர்தல் போல, பீதாம்பரத்துக்குள் திருமாலின் கரிய திருமேனிக் காட்சி உள்ளது என்று முதற்கண் பொருள் செய்தோம்.

இனி வெள்ளைப் பளிங்கு போல் நிறம் உடைய பலராமனாகிய தம்முன் ஒருபுறம் இருக்க, கரிய திருமேனியாகிய கண்ணன் உடன் வீற்றிருக்கும் காட்சி "இளவெயில் வளாவ இருள் வளர்வென" உள்ளது என்று பொருள் கூறலும் ஆகும்.

சங்க கால இலக்கியங்கள் கண்ணன், பலராமன் என்ற இருவரையும் இணைத்து கூறுதல் பல இடங்களிலும் வரும். முன்னைய பரிபாடல்களிலும் இருவரும் ஒருங்கே காணும் காட்சிகள் வந்துள்ளமை காண்க.

இவ்வாறு திருமாலிருஞ்சோலை மலையே அப்பெருமானது காட்சியை நமக்கு நல்குகிறது.

"நினைமின் மாந்தீர்! கேள்மின் கமழ்சீர்" என்று அறைகூவி மக்களை அழைக்கிறார். "மாந்தர்களே! மலையை நினையுங்கள்! திருமாலாகவே நினையுங்கள்! அம்மலையின் சிறப்பை கேளுங்கள்" என்கிறார்.

மற்ற எந்த திவ்ய தேசங்களுக்கும் இல்லாத சிறப்பு, இந்த தலத்துக்கு உண்டு. திவ்ய தேச பெயரிலேயே, திருமால் குடி கொண்டிருக்கிறார் அல்லவா?

"திருமாலிருஞ்சோலை மலை" என சொல்கிற போதே ஒருமுறை திருமால் பெயரை சொல்கிற பேறு, நமக்கு கிடைக்கிறது என்பதை நினையுங்கள் என்று மக்களை அழைத்து, மலையின் மாண்பினை கேளுங்கள் என்கிறார்.



Please Subscribe to Madhuramurali - details on top of last page

*சுனையெலாம் நீலம் மலரச் சுனை சூழ்*
*சினையெலாம் செயலை மலரக் காய் கனி*
*உறழ நனை வேங்கை ஒள்ளிணர் மலர*
*மாயோன் ஒத்த இன்னிலைத்தே*
*சென்று தொழுகல்லீர்! கண்டு பணிமின்னே"*

சுனையெலாம் நீலப்பூக்கள் மலர்ந்துள்ளன; சுனையை சுற்றியுள்ள அசோக மரங்கள் மலர்கின்றன; காயும் கனியும் நிறம் மாறுபட தோன்ற உயர்ந்த வேங்கை மரங்களில் பூங்கொத்துக்கள் விரிகின்றன. இந்த நிலையில் அம்மலை நீலநிறமேனியனாகிய திருமாலை ஒத்து விளங்குகிறது. ஆகவே திருமால் வேறில்லை; மலை வேறன்று; மலையே திருமாலாக தோன்றுகிறது. சென்று அம்மலையை வணங்க இயலாதவர்கள் எட்ட இருந்து மலையை கண்டு வணங்குங்கள் என்கிறார். (செயலை - அசோக மரம். வேங்கையின் பூங்கொத்தும் காய்கனிகளும் ஒன்றோடொன்று நிறம் மாறுபட உள்ளன.)

நீலமலர் சுனையிடம் மலர்கிறது. அதனை சூழ்ந்த அசோக மரம் கிளைகளில் மலர்கிறது. இது திருமாலது பொன்னாலாகிய உடைக்கு (பீதாம்பரத்துக்கு) ஒப்பாக உள்ளது. மலையில் காய்கனி நிறம் வேறுபட மலர்ந்த பூங்கொத்து உடைய வேங்கை பெருமானது இரத்தின கிரீடமாகிய மணிமுடிக்கு ஒப்பு என்று கொண்டால் திருமாலே மலையாக அமர்ந்துள்ள காட்சியை காணலாம்.

பரிபாடல் 13ஆம் பாடலின்

*மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று*
*அணிவபை பமைந்த பூந்துகில் புனைமுடி*

என்னும் பகுதி, இது போலவே பெருமானது பீதாம்பரத்தையும் முடியையும் மலைமேல் பரந்த இள ஞாயிற்றின் ஒளிக்கு ஒப்புமை கொண்டுள்ளமையும் காண்க.

. (தொடரும்)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

# அப்பாலுக்கு அப்பால்

## சித்தாராமர் மாற்றம் - அல்லமர் மறுவருகை



பிரபு சென்னபசவரை பார்த்தவுடனே, அவர் சித்தாராமரை பார்த்தவாறே "பட்டம் எவ்வளவு உயர பறந்தாலும், அதற்கு கயிறு என்ற சார்பும் ஒரு மையமும் இருக்கத்தானே வேண்டும்? பரமன் அகத்துள்ளே, பாரபட்சமின்றி, எல்லைகளற்றவனாய் இருக்கிறான் என்றால் அவன் தேவையானால் குறுகி, பக்தனுக்காக பட்சத்துடன், புறத்தில் வருவான் என்பதையும் உணரத்தானே வேண்டும்? தத்துவ உண்மை நிலையில் அவனை சிந்தித்து அனுபவித்தால் மட்டும் போதாது; உருவமாய் அவனை ஆராதித்து மகிழவும் வேண்டும் அல்லவா" என்று பலவிதமாய் சென்னபசவர் பேச பேசவே சித்தாராமர் தம் மனதை மாற்றி கொண்டார். சென்னபசவரிடமிருந்தே கரதல லிங்கத்திற்கான உபதேசத்தையும் பெற்று கொண்டார். சென்னபசவரை குருவாக ஏற்று அவருக்கு பாத பூஜை செய்து, அவரது பிரசாதத்தையும் ஸ்வீகரித்தார்.

அல்லமபிரபு சித்தாராமர் செய்ததை அங்கீகரித்தார். சித்தாராமருக்கு இப்படி ஒரு தீக்ஷை தேவையில்லை எனினும், அவர் பலருக்கு குருவாய் இருப்பதினால் பிறர் பொருட்டு இப்படி செய்வது அவசியம் என்பது அல்லமரின் உள்ளம் என்பாரும் உண்டு. பசவரை பார்க்க அழைத்து வந்தவர் அல்லமரே என்பதால் யோகீஸ்வரராய் இருந்த சித்தாராமரை சிவயோகியாய் மாற்றவே அழைத்து வந்தார் என்பாரும் உண்டு. சித்தாராமரும் சென்னபசவர் குருவாக இருந்து அருளியதை பல்விதமாய் துதித்து பாடுகிறார். வயதில் சிறியவரான சென்னபசவர் சித்தாராமருக்கு குருவாக இருந்தாலும், அல்லமர் முதற்கொண்டு அனைத்து பெரியவர்களுமே சித்தாராமரை மிக உயர்வாக, அவரை ஒரு சித்தி பெற்ற மஹாத்மா என்றே பேசுகின்றனர்.

சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாகவே தன்னுடனே வாழ்ந்த சென்னபசவருக்கே கூட கரதலலிங்க



Please Subscribe to Madhuramurali - details on top of last page

உபாசனையை எளிதில் பசவர் உபதேசிக்கவில்லை; மிகுந்த பிரயாசைக்கு பிறகு ஒருமுறை சென்னபசவர் பசவரின் கரங்களில் லிங்கம் தந்து வாங்கி கொண்டார். பசவர் ஏனென கேட்கையில் "உங்கள் கரஸ்பரிசம் பெற்று வந்த இது இப்பொழுது எனக்கு உரிய அருளை தரவல்லதாயிற்று" என்று சொன்னார். உபாசனை ரகசியங்களை அல்லமரே நேரடியாக சென்னபசவருக்கு உபதேசித்தார். அல்லமரின் உத்திரவை ஏற்றே சென்னபசவர் சித்தாராமருக்கு உபதேசம் செய்தாரென்பர். ஆதலால் "உபாசனை பற்றிய வெறும் அறிவென்பது சக்கைதான்; குரு உபதேசமோ வெற்று சடங்கில்லை. குருவருளே உபாசனையை நிஜமாக்குகிறது" என்பது இதனால் தெளிவாகிறது.

சித்தாராமர் போலவே பல மஹாத்மாக்கள் அல்லமரின் தரிசனத்திற்காகவே பசவரின் சத்சங்கம் வந்து போயினர். அவர்களில் அக்காமஹாதேவியும் ஒருவர். அல்லமர் ஒருமுறை "நான் இப்படியே இங்கிருப்பது தகாது. எனது தர்மம் சஞ்சரித்து கொண்டே இருப்பதுதான். சிறிது காலம் தேசாந்தரம் சென்று வருகிறேன்"என்று எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு போனார்.

சிலகாலம் கழித்து, பசவரிடம் விநோதமாய் ஒரு புகார் வந்தது. சில சரணர்கள் வந்து "பசவண்ணரே! ஒரு கழைக்கூத்தாடி புதிதாய் வந்து நம்மை கிண்டல் செய்கிறான். பல வித்தை காண்பிக்கிறான். மந்திரக்காரனாம். கயிறை பாம்பாக்குகிறான். பாம்பை கயிறாக்குகிறான். பார்ப்பதற்கு பரதேசி மாதிரி இருக்கிறான்" என்றனர். அதைக்கேட்ட பசவர் சிரித்து "சரிதான். அல்லமபிரபு வந்து விட்டாற் போலிருக்கிறது. மிக நல்ல விருந்து ஒன்று ஏற்பாடு செய்யுங்கள்" என்றவாறு விரைந்து சென்று அந்த கழைக்கூத்தாடியை உற்று நோக்கி "பிரபு! எப்பொழுதும் விளையாட்டா! வாருங்கள்" என்று மரியாதையுடன் அழைத்தார். அல்லமர்தான் அவர். அவரும், "உன்னை பிரிய முடியாது போலிருக்கிறது" என்று சொல்லி கொண்டே வந்தார். அதிசயமாக "பசிக்கிறது" என்றார். "அதற்கென்ன, விருந்து தயார்" என்று கம்பீரமுடன் அழைத்தார் சென்னபசவர். அப்பொழுது அல்லமர் கண்களில் மின்னலென புன்சிரிப்பு தோன்றி மறைந்தது.

(தொடரும்)



Please Subscribe to Madhuramurali - details on top of last page

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் **(D.D /M.O/Cash)** மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | நவம்பர் 13, 29 டிசம்பர் 13, 28 |
| நவம்பர் 3 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |
| நவ 4 - 10 | மஹாமந்திர சப்தாஹம் - மதுரபுரி ஆஸ்ரமம் |
| நவ 22 | மஹாரண்யம் ராமர் கோவில் கும்பாபிஷேகம் |
| டிசம்பர் 9 | செல்வ விநாயகர் கோவில், கீழ்படப்பை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.




Please Subscribe to Madhuramurali - details on top of last page